



# தகவல் தொழில்நுட்பவியல் துறை

## மானியக் கோரிக்கை எண். 31

அறிவிப்புகள்

2020–2021

# தகவல் தொழில்நுட்பவியல் துறை

## மானியக் கோரிக்கை எண். 31

*****

அறிவிப்புகள்

2020 – 2021

*****

**ஆர்.பி. உதயகுமார்**
வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை மற்றும்
தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்

## 1. தரவு மைய பூங்கா

தமிழகத்தில் குறிப்பாக சென்னையில், பன்னாட்டு நிறுவனங்கள் தங்களது தரவு மையங்கள் அமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. சென்னையில் 14.8 Tbps கடல்வழி கேபிள் அதிவேக அலைக்கற்றை வசதி ஏற்கனவே ஏற்படுத்தப்பட்டுள்ளது.

உலகின் மற்ற பகுதிகளுடன் சென்னையை இணைக்கும் வகையில் அமைந்துள்ள இவ்வசதியைப் பயன்படுத்தி, தரவு மையங்கள் அமைத்திடவும், முதலீட்டை ஈர்த்திடவும், **இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி** சென்னை, சோழிங்கநல்லூரில் உள்ள எல்கோசெஸ்சில் 6 ஏக்கர் நிலப்பரப்பில் 3 இலட்சம் சதுர அடியில் சுமார் ரூ.250 கோடி மதிப்பீட்டில் தரவு மைய பூங்கா ஒன்று தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தால் அமைக்கப்படும்.

(D)

## 2. தமிழ்நாட்டிற்கான தரவுக் கொள்கை

அரசுத் தரவுகளை பேணி பாதுகாத்து வைப்பதே இத்தரவுக் கொள்கையின் முக்கிய நோக்கமாகும். **இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி** அரசுத் தரவு சேமிப்பு, தரவு மீட்டெடுப்பு, தரவு பகிர்வு மற்றும் தரவு பாதுகாப்பு தொடர்பான விதிகள் மற்றும் நெறிமுறைகள் வகுக்கப்படுவதோடு, இக்கொள்கையை அனைத்துத் துறைகளும் பின்பற்றுமாறும் அறிவுறுத்தப்படும்.

## 3. அரசுப் பணியாளர்களுக்கான திறன் மேம்பாட்டு பயிற்சி

திறன் மேம்பாட்டின் ஒரு பகுதியாக, மாநிலத்தில் பல்வேறு நிலைகளில் உள்ள அரசுப் பணியாளர்களுக்கு அடிப்படை கணினிக் கல்வியிலிருந்து வளர்ந்து வரும் தொழில்நுட்பத்திலான கணினிப் பயிற்சிகள் வரை அவரவர் துறையில் தேவைக்கேற்ப வழங்கப்படும்.

இவை தவிர அரசு இ–சேவை மையங்கள் வாயிலாக வழங்கப்படும் பல்வேறு இணைய வழி சேவைகள் தொடர்பான பயிற்சி, **இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி** கிராம நிர்வாக அலுவலர்கள், வருவாய் ஆய்வாளர்கள், பஞ்சாயத்து செயலாளர்கள் மற்றும் இதர மாவட்ட அலுவலர்களுக்கு பயிற்சிக் கூட்டாளர் மூலம் ரூபாய் 10 கோடி செலவில் வழங்கப்படும். இப்பயிற்சித் திட்டம் தமிழ்நாடு மின்னாளுமை முகமையின் நிதி ஆதாரத்தின் மூலம் செயல்படுத்தப்படும்.

## 4. பகிர்மான உட்கட்டமைப்புக்கான மெய்நிகர் சேவையகம்

மெய்நிகராக்கத் தொழில்நுட்பத்தினை அடிப்படையாகக் கொண்டு, அரசுத் துறைகளுக்காக 'பகிர்வு சேவையகக் கட்டமைப்பு' ஒன்று **இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி** தமிழ்நாடு மின்னாளுமை முகமையால் உருவாக்கப்படும். வலைதள சேவை, கைபேசி செயலி மற்றும் இதர பயன்பாடுகளுக்குத் தேவையான குறைந்த மற்றும் மிதமான கணக்கீட்டு ஆற்றலை இம்மெய்நிகர் சேவையகம் பூர்த்தி செய்யும்.

மேலும், சேவையகத்தின் திறன் விரிவாக்கத்தால் பொதுமக்களுக்கு குறைந்த பொருட்செலவில் சிறந்த முறையில் அரசின் சேவைகளை வழங்க இது உதவும்.

## 5. கல்வி நிறுவனங்கள் தோறும் கணித்தமிழ்ப் பேரவை

கல்வி நிறுவனங்கள் தோறும் கணித்தமிழ்ப் பேரவை ஏற்படுத்தப்பட வேண்டும் என்ற அரசின் கொள்கைக்கேற்ப, தமிழ் இணையக் கல்விக்கழகத்தால் 2016 முதல் தமிழகத்தில் உள்ள உயர்கல்வி நிறுவனங்களில் 200 கணித்தமிழ்ப் பேரவைகள் தொடங்கப்பட்டு, அவை திறம்படச் செயலாற்றி வருகின்றன.

கணித்தமிழ் வளர்ச்சியின் முக்கியத்துவத்தை இளைஞர்களிடம் கொண்டுசெல்லும் உயரிய நோக்கில், **இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி** உயர்கல்வித் துறையின் துணையுடன் தமிழகத்தில் உள்ள அனைத்து உயர்கல்வி நிறுவனங்கள் மற்றும் கல்லூரிகளிலும் கணித்தமிழ்ப் பேரவைகள் தொடங்கிடத் தேவையான நடவடிக்கைகள் தமிழ் இணையக் கல்விக்கழகத்தால் மேற்கொள்ளப்படும்.

## 6. ‘கணித்தமிழ்’ மின்னிதழ் (e-Magazine on KaniTamil)

தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் பரப்புரைப் பணிகளை மேம்படுத்தும் வகையில், கணித்தமிழ் வளர்ச்சியில், தமிழ் இணையக் கல்விக்கழகம் ஆற்றி வரும் பணிகள், கணித்தமிழ் வளர்ச்சியில் உலகெங்கும் உள்ள தமிழ் அமைப்புகளின் பங்களிப்புகள், ஆராய்ச்சிக் கட்டுரைகள், கணித்தமிழ் வளர்ச்சியை ஊக்கப்படுத்த தமிழக அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் போன்றவற்றை கணித்தமிழ் ஆர்வலர்கள் மற்றும் மாணவர்கள் அறிந்து கொள்ளும் வகையில் **இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி** தமிழ் இணையக் கல்விக்கழகத்தால் **“கணித்தமிழ் மின்னிதழ்”** ஒன்று திங்கள்தோறும் தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் இணையதளத்தில் வெளியிடப்படும்.

மாநிலத்தில் உள்ள கணித்தமிழ்ப் பேரவை உறுப்பினர்கள் அனைவருக்கும் இம்மின்னிதழ் மின்னஞ்சல் வழியாக அனுப்பப்படும்.

## 7. தமிழ் இணையக் கல்விக்கழக தரவுச் சேவையகங்களை மாநில தரவு மையத்தில் நிறுவுதல்

தமிழ் இணையக் கல்விக்கழகம் 2000ஆம் ஆண்டு தொடங்கியது முதல் கடந்த 20 ஆண்டுகளாக கணித்தமிழ் வளர்ச்சியில் முக்கியப் பங்கு வகித்து வருகிறது. தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் இணையவழிப் பாடத்திட்டங்கள், உருவாக்கப்பட்ட தமிழ் மென்பொருள்கள், மின் நிகண்டு, மின் நூலகம், விரிதரவு, மின் அகராதி, இணைய தளங்கள் போன்றவற்றின் தரவுகள் தற்போது தமிழ் இணையக் கல்விக்கழகத்தில் நிறுவப்பட்டுள்ள தரவுச் சேவையகத்திலேயே தொடர்ந்து பராமரிக்கப்பட்டு வருகிறது.

இத்தரவுச் சேவையகத்தின் தரவு சேமிப்பின் அளவை அதிகரித்திடும் வகையிலும், தரவுப்

பாதுகாப்புக்காகவும், **இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி** அனைத்து தரவுகள் மற்றும் தரவுச் சேவையகங்கள் மாநிலத் தரவு மையத்தில் நிறுவப்படுவதுடன், தரவுகளைப் பேரழிவிலிருந்து காத்திடும் வகையில், அதன் பிரதிகள் பேரிடர் தரவு மீட்பு மையத்தில் பாதுகாக்கப்படும்.

## 8. உயர்கல்வி ஆசிரியர்களுக்கு வளர்ந்து வரும் தகவல் தொழில்நுட்பங்களில் (Emerging Technologies) பயிற்சி

தகவல் தொழில்நுட்பத்தின் வளர்ச்சியில், செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence), நம்பிக்கை இணையம் (BlockChain), இயந்திரக் கற்றல் (Machine Learning), மேகக் கணினியம் (Cloud Computing), இணையப் பாதுகாப்பு (Cyber Security) போன்ற புதிய தொழில்நுட்பங்கள் அதிக தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றன.

இப்புதிய தகவல் தொழில்நுட்பங்களில் ஆசிரியர்களின் பயிற்றுவிக்கும் திறனை மேம்படுத்திடும் நோக்கில், **இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி** தமிழகத்தில் உள்ள அரசு பொறியியல், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு வளர்ந்து வரும் தகவல்

தொழில்நுட்பங்கள் குறித்த பயிற்சி ஐ.சி.டி. அகாடமி (ICT Academy) மூலம் அளிக்கப்படும். இத்திட்டம் ஐ.சி.டி. அகாடமி நிறுவனத்தின் உறுப்பினர் திட்ட நிதி ஆதாரத்தின் மூலம் செயல்படுத்தப்படும்.

## 9. பட்டதாரி மாணவர்களின் வேலைவாய்ப்பு மற்றும் பணிபுரியும் திறனை மேம்படுத்த வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களில் பயிற்சி

தகவல் தொழில்நுட்பத்தில் ஏற்பட்டு வரும் புரட்சி, தொழில்துறையில் பல புதிய தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தி உள்ளதுடன், பல்வேறு தொழில்களின் செயல்படும் முறையையும் மாற்றியுள்ளது. இதன் காரணமாக தொழில் துறையில் ஏற்படும் புதிய வேலைவாய்ப்புகளில் தொழில்நுட்பம் சார்ந்த திறன் பெரிதும் எதிர்பார்க்கப்படுகிறது.

தொழில் நிறுவனங்களின் நுழைவு நிலை வேலைகளுக்கு தெரிந்தெடுக்கப்படுபவர்கள் செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence), நம்பிக்கை இணையம் (BlockChain), இயந்திரக் கற்றல் (Machine Learning), மேகக் கணினியம் (Cloud Computing), இணையப் பாதுகாப்பு (Cyber Security) போன்ற புதிய தொழில்நுட்பங்களில் திறன் உடையவர்களாக இருப்பது அவசியமாகிறது.

எனவே, மாநிலத்தில் உயர்கல்வி நிறுவனங்களில் பட்டப்படிப்பு இறுதியாண்டில் பயிலும் மாணவர்களுக்கு அவர்களது வேலை பெறும் திறனை அதிகரிக்கும் வகையில் **இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி** ஐ.சி.டி. அகாடமி மூலம் வளர்ந்து வரும் தகவல் தொழில்நுட்பங்கள் குறித்த பயிற்சி அளிக்கப்படும். இத்திட்டம் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம், கிராம சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனம் (RSETIs) மற்றும் தீன்தயாள் உபாத்யாய கிராமின் கௌசல்யா திட்ட நிதியின் மூலம் செயல்படுத்தப்படும்.

## 10. கேபிள் டிவி தொலைக்காட்சி நலவாரியம் மறுசீரமைப்பு மற்றும் பெயர் மாற்றம்

கேபிள் டிவி ஆப்பரேட்டர்கள் மற்றும் தொழிலாளர்கள் பயன்பெறும் வகையில் நலத்திட்டங்களை செயல்படுத்த கேபிள் டிவி தொலைக்காட்சி தொழிலாளர்கள் நலவாரியம் என்பதனை **இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, "தமிழ்நாடு கேபிள் டிவி ஆப்பரேட்டர்கள் மற்றும் தொழிலாளர்கள் நலவாரியம்"** என பெயர் மாற்றம் செய்து புதுப்பித்து புதிய அலுவல் மற்றும் அலுவல்சாரா உறுப்பினர்கள் கொண்ட நலவாரியம் அமைக்கப்படும்.

**ஆர்.பி. உதயகுமார்**
**வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்**

தமிழ்நாட்டில் விரைவான பொருளாதார வளர்ச்சியைக் கொண்டுவருவதன் மூலமாக அனைத்து மக்களும் பயனடையும் வகையில் பாதுகாப்புடன் கூடிய மிகுந்த வளர்ச்சிக்கான உந்துசக்தியை உருவாக்குவதே எனது எதிர்கால தொலைநோக்குப் பார்வையாகும்.

– மாண்புமிகு புரட்சித் தலைவி

**அம்மா** அவர்கள்